1973 மார்ச் 9]

திரு. கே. எ. வகாப் : போதிய இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது அந்த பஸ் ஸ்டாண்டிற்கு அருகிலேயே சென்னையிலே மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த இடத்தை சும்மா வைத்திருக்கிறார்கள். எந்தவிதமான கன்ஸ்ட்ரக்ஷனும் செய்யவில்லை என்று சொல்லி அந்த இடத்திலே அதை அமைப்பதற்கு மத்திய அரசினிடத்தில் அனுமதிபெற அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசாங்கம் அந்த இடத்தைத் தருவதற்கு இல்லை என்று சொல்லி விட்டார்கள். வேறு பல காரியங்களுக்காக அந்த இடத்தைக் கேட்டபொழுது இல்லையென்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

வெளியூர்களில் கேளிக்கை நடனங்கள்.

*300 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளியூர்களில் உள்ள உணவு விடுதிகளில் இரவு கேளிக்கை நடனங்கள் நடத்த அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : சென்னை போன்ற நகரங்களிலே கேளிக்கை நடனங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவது போல் கோவை போன்ற பெரிய நகரங்களிலும் அனுமதியளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு உரிமம் வழங்குகிற பொறுப்பு அரசினிடத்திலே இல்லை. கேளிக்கை நடனங்கள், உணவகங்கள் இவற்றை நடத்துவதற்கு அந்த அந்த நகராட்சிகள்தான் அனுமதியளிக்கவேண்டும். உரிமம் வழங்குகின்ற அதிகாரி அங்கங்கேயுள்ள காவல் துறை டெபுடி சூப்பிரண்டெண்டண்ட் அவர்களைக் கலந்துகொள்ள வேண்டும் என்று இருக்கிறது. 1888 ஆம் ஆண்டு மாநகராட்சி காவலர் சட்டத்தின்

34-வது பிரிவுப்படி சென்னை நகரத்தைப் பொறுத்த வரையிலே உரிமம் அளிப்பதற்கு கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. ஒழுங்கையும் கண்ணியத்தையும் கடைப்பிடிப்பதற்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னையிலே பல ஹோட்டல்களில் இதுபோன்ற நடனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பலர் இரவு நேரங்களிலே மது அருந்திவிட்டு அந்த நடனங்களையே பார்த்துக்கொண்டு இருந்துவிடுகின்ற நிலைமையினால் வீட்டிற்குக் கூடச் செல்லாமல் இருந்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அதையெல்லாம் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னையைப் பொறுத்தவரையில் காவல் துறை கமிஷனர் நிபந்தனைகளோடு அனுமதியை வழங்குகிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்திற்குப் போகாமல் இருப்பது நல்லது. அங்கே கடைப்பிடிக்கவேண்டிய சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதிமுறைகள் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. காவல் துறையினர் இதிலே கண்காணிப்பாக இருந்து வருகின்றனர்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த கேளிக்கை நடனம், கண் காட்சி இவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறபொழுது அந்தச் சட்டத்தை மீறி ஆபாசமான நடனங்களை ஆடியதால் பல கேஸ்கள் போடப்பட்டும்கூட இன்னும் அது நிற்கவில்லையே, எனவே உரிமை வழங்குவதையே அரசாங்கம் தடை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேளிக்கை என்பதிலே நடனத்தைத் தடைசெய்ய முடியாது. இதைப்போன்றே இசைநிகழ்ச்சியையும் தடைசெய்ய முடியாது. அப்படி நடக்காமல் இருப்பதற்காகத்தான் சில நிபந்தனைகளை விதித்து வரம்பு கட்டுகிறோம் 26—10—72 தேதியிட்ட ஆணைப்படி கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையிலிருந்து விரிவான ஆணை ஒன்று இதைப் பொறுத்த வரையிலே பிறப்பிக் கப்பட்டிருக்கிறது.

[1973 மார்ச் 9]

உரிமம் பெற்ற வளவுகளுக்குள் ஆபாச நிகழ்ச்சிகள் நடத்தப் படவோ நடத்த அனுமதிக்கப்படவோ கூடாது.

உரிமம் பெற்ற வளவுகளுக்குள், மார்பு, அடிவயிறு அல்லது பிற மறைவிடங்களில் அணிந்துள்ள ஆடைகள் நீக்கப்படுகின்ற, 'துகில் உரிகாட்சி' போன்றவை நடத்தப்படக்கூடாது.

உரிமம் பெற்ற வளவுக்குள், மெல்லிய அல்லது ஓரளவு மெல்லிய அல்லது மிகக் குறைந்த ஆடைகளை அணிந்து கொண்டு நிர்வாண மாகவோ அல்லது அரை நிர்வாணமாகவோ நிகழ்ச்சிகள் நடத்து வதற்கு எவரும் அனுமதிக்கப்படக்கூடாது.

சிற்றின்ப உணர்ச்சியை அல்லது பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் எழுதப்பட்ட பாடல், நடனப்பாடல் அல்லது பிற சைகைகள் உரிமம் பெற்ற இடங்களில் அனுமதிக்கப் படக்கூடாது.

நிகழ்ச்சிக்கென குறிப்பிடப்பட்ட இடத்திலேயே, அதாவது மேடையிலேயே, ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடத்தப்படவேண்டும். மேற்படி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் கலைஞர்கள் மற்றவர் களுடனே அல்லது காட்சிக்கு வந்திருப்பவர்களுடனே கலந்து பழகக்கூடாது அல்லது நெருங்கித் தொடர்பு கொள்ளக்கூடாது.

அத்தகைய நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் கலைஞர் அல்லது கலைஞர்கள் நிகழ்ச்சியின்போது, தங்கள் உடலிலிருந்து எந்தப் பொருளையும் அல்லது ஆடையின் ஒரு பகுதியையும் நீக்கி காட்சிக்கு வந்திருப்பவர்கள் மீது அவற்றை எறிவது கூடாது அல்லது அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படக்கூடாது.

இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு 18 வயதுக்குக் குறைந்தவர்கள் எவரும் அனுமதிக்கப்படக்கூடாது. இவ்வளவு நிபந்தனைகளையும் விதித்துத்தான் உரிமம் வழங்கப்படுகிறது. அவற்றை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: இந்த காபரே நடனம் அசைவ ஹோட்டல்களில்தான் நடக்கிறது. சைவ ஹோட்டல்களில் இது நடத்தப்படுமா என்று கேட்டபொழுது சைவ ஹோட்டல்களில் பார்வதி பரமசிவன் நடனம் அனுமதிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். அதை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சைவ ஹோட்டல், வைணவ ஹோட்டல், அசைவ ஹோட்டல் என்று இல்லை. யாரும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த ஆபாச நடனங்களைத் தவிர்ப்பதற்கு பரத நாட்டியம் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதை நாம் ஏற்பாடு செய்யவேண்டியதில்லை, அவர்களே ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி : 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்கிற கொட்டகைகளில்தான் அதிகமாகக் கூடுகிறார்கள். இதற்கு ஏதாவது வேறு வழி உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் விதித்திருக்கிற விதி 18 ஆண்டுகளுக்குக் குறைவாக வயதுள்ளவர்கள் அனுமதிக்கக்கூடாது என்பதுதான்.

திரு. கே. எ. வகாப் : 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு அனுமதி கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போன்று 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் அதற்குப் போகக் கூடாது என்று நிபந்தனை விதிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 50, 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதைச் செய்யாமல் வேறு எதைச் செய்வார்கள் ? (சிரிப்பு). அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்த வேண்டியதுதான்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவர் அவர்களே, இந்த நடனங்களுக்கு இவ்வளவு நிபந்தனைகளைப் போடுவதன் காரணத்தினால் தான் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுகிறது. அந்த நிபந்தனைகளைத் தளர்த்திவிட்டால் அது அன்றாட நிகழ்ச்சியாகிவிடும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு வயது 50க்கு மேல் ஆகிவிட்டது என்பதை சபைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (சிரிப்பு).